සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved Catholic

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	**கத்தோலிக்கத் திருமறை**

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

(01) மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ் கோடிடுக.

01. ஆரம்பத் திருச்சபையின் பன்னிரண்டாவது திருத்தூதராக விளங்குபவர் யார்?
1. பேதுரு 2. மத்தியா 3. யூதாஸ் 4. சீமோன்

02. 'பெத்தேல்' என்பதன் பொருள் யாது?
1. ஆலயம் 2. உடன்படிக்கை
3. ஆண்டவரின் இல்லம் 4. ஆண்டவரின் ஆசி

03. "உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" எனக் கூறி இறைவனின் விருப்பத்துக்குப் பணிந்தவர் யார்?
1. எலிசபெத் 2. யோசேப்பு 3. புனித மரியா 4. செக்கரியா

04. புனித பவுல் பொய் பேசுவதை விட்டுவிட்டு உண்மை பேச வேண்டும் என்பதைக் குறிப்பிடும் திருமுகம் எது?
1. எபேசியர் 2. கொரிந்தியர்
3. கொலோசையர் 4. திமொத்தேயு

05. செபமாலைப் பக்தி முயற்சியை அறிமுகப்படுத்தியவர் யார்?
1. தூய அகுஸ்தினார் 2. தூய டொமினிக்
3. தூய அம்புறோஸ் 4. தூய பிரான்சிஸ்

06. செபமாலை செபிக்கும் போது துயர் நிறை மறையுண்மைகள் தியானிக்கப்படும் நாட்கள் எவை?
1. வியாழன், சனி 2. வெள்ளி, ஞாயிறு
3. செவ்வாய், வியாழன் 4. செவ்வாய், வெள்ளி

07. எமது செப மரபுகளில் மிகப் பழமை வாய்ந்த திருவிவிலியச் செபம் என அழைக்கப்படுவது யாது?
1. திருப்பலி 2. நவநாள் செபங்கள்
3. நற்செய்திகள் 4. திருப்புகழ் மாலை

08. சிலுவைப் பாதை நிலைகளில் இயேசு எருசலேம் பெண்களுக்கு ஆறுதல் கூறிய நிலை எது?
1. மூன்றாம் நிலை 2. ஐந்தாம் நிலை
3. எட்டாம் நிலை 4. பத்தாம் நிலை

09. "திருமணித்தியாலம்" எனும் பக்தி முயற்சி யாரால் ஆரம்பமானது?
1. புனித மார்கரீத் மரியம்மாவால் 2. புனித மரியாவால்
3. புனித பேதுருவானவரால் 4. புனித மார்த்தாவால்

10. "நவநாள்" என்பதன் அர்த்தம் யாது?
1. ஒன்பது 2. வழிபாடு 3. எட்டு 4. திருப்பலி

(2 x 10 = 20 புள்ளிகள்)

Past Papers Wiki

(02) பொருத்தமான சொற்களை தெரிவு செய்து இடைவெளி நிரப்புக.

(செபமாலையைத், புகழ்ச்சி, பத்தாவது, ஆலயத்திருவிழா, ஒளியின் மறையுண்மைகளை)

01. தீய செயல்களைச் செய்யத் தூண்டும் பேராசைக்கு கீழ்ப்படிதல் பாவச் செயலென்று ..... கட்டளை கற்பிக்கின்றது.

02. திருத்தந்தை தூய இரண்டாம் ஜோன் பவுல் ..... அறிமுகப்படுத்தினார்.

03. அன்னை மரியாவோடு உறவு கொள்ள விரும்புவோருக்கு ..... தவிர வேறு சிறந்த வழி எதுவுமில்லை.

04. பங்கினதும் பங்கு மக்களினதும் நல்வாழ்வுக்காகப் புனிதரின் பரிந்துரையை வேண்டுவதற்காகவும் ..... கொண்டாடப்படுகிறது.

05. திருப்புகழ்மாலை இவ்வுலகைப் படைத்த இறைதந்தைக்கு ..... கூறுகின்ற செபமாகும்.

(2 x 5 = 10 புள்ளிகள்)

(03) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடைப்பினுள் அடையாளமிடுக.

01. நாம் பிறர் சொத்துக்களை நீதியான முறையில் பெற்றுக் கொள்வது பாவமல்ல. (.....)

02. செபமாலையில் எமது மீட்பின் மறையுண்மைகளை நாம் தியானிக்கின்றோம். (.....)

03. நாம் எமது ஆலயத் திருவிழாவுக்கு முன் ஒப்புரவு செய்ய வேண்டியது அவசியமில்லை. (.....)

04. கிறிஸ்துவின் திருப்பாடுகளையும் மரணத்தையும் நினைவு கூறுவது திருப்புகழ்மாலை ஆராதனையிலாகும். (.....)

05. சிலுவைப் பாதையின் நிலைகள் பதினான்கு உள்ளன. (.....)

(2 x 5 = 10 புள்ளிகள்)

பகுதி – II

- **பகுதி இரண்டில் முதலாம் வினாவிற்கும் ஏனையவற்றில் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.**

01) எல்லா வினாக்களுக்கும் சுருக்கமாக விடை தருக.
1. ஈசாக்கின் புதல்வர்கள் இருவரினதும் பெயர்களை எழுதுக.
2. யாக்கோபுவுக்கு 'இஸ்ரயேல்' எனப் பெயர் வரக் காரணம் யாது?
3. திருமுழுக்குச் சடங்கில் அவசியமானதும், கட்டாயமானதுமான படிமுறை எது?
4. மறைமாவட்ட அருட்பணியாளர்கள் அளிக்கும் வாக்குறுதிகள் இரண்டையும் எழுதுக.
5. கிறிஸ்தவத் திருமணத்தின் பண்புகள் இரண்டையும் எழுதுக.
6. தூய ஆவிக்கு எதிராகப் பொய் கூறி மரணித்த இருவரையும் குறிப்பிடுக.
7. துறவற அருட்பணியாளர்களின் சபைகள் இரண்டு எழுதுக.
8. பொதுக் குருத்துவத்திற்குரிய ஒன்றியங்கள் இரண்டு எழுதுக.
9. செபமாலையில் செபிக்கப்படும் மறையுண்மைகள் இரண்டு எழுதுக.
10. உமது பங்கின் பெயரையும், உமது ஆலயம் அர்ப்பணிக்கப்பட்டுள்ள புனிதரின் பெயரையும் எழுதுக.

(2 x 10 = 20 புள்ளிகள்)

02) 1. ஏழாம் கட்டளையால் விலக்கப்படும் செயல்கள் இரண்டு எழுதுக.
2. தற்காலத்தில் களவு நடைபெறும் வழிகள் மூன்று எழுதுக.
3. கிறிஸ்தவ மாணவராகிய நீர் ஏழாம் கட்டளைப்படி நீதியான முறையில் சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

03) 1. செபமாலை மறையுண்மைகளில் உள்ளடங்கும் விடயங்கள் எவை?
2. மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளில் தியானிக்கும் நிகழ்வுகள் மூன்று எழுதுக.
3. நாம் செபமாலையில் பயன்படுத்தும் 'காணிக்கைச் செபத்தினை' எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

04) 1. ஆலயத் திருவிழா கொண்டாடுவதற்கான காரணங்கள் இரண்டு எழுதுக.
2. திருவிழாக் காலங்களில் பங்கு அருட்பணியாளர்களின் பணிகள் மூன்று எழுதுக.
3. ஆலயத் திருவிழாவை அர்த்தமுள்ள முறையில் கொண்டாடுவதற்கு நீங்கள் செய்யக்கூடிய நற்செயல்கள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

05) 1. நற்கருணை ஆசீரைப் பெறக்கூடிய சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.
2. சிலுவைப் பாதை நிலைகளில் 4, 5, 6 ஆம் நிலைகளில் நினைவு கூறப்படும் நிகழ்வுகளை எழுதுக.
3. சிலுவைப் பாதை தியானத்தின் போது நீர் பக்தியோடு செயற்படும் முறைகள் ஐந்தினை எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

06) 1. திருமணித்தியாலம் நடத்த வேண்டிய சந்தர்ப்பங்கள் இரண்டு எழுதுக.
2. திருமணித்தியாலம் நடத்துவதன் நோக்கங்கள் மூன்று எழுதுக.
3. ஆலயத்தில் நற்கருணைப் பேழையின் முன் நாம் நடந்து கொள்ள வேண்டிய முறைகள் ஐந்து எழுதுக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

07) எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
1. செபமாலையின் வரலாறு
2. திருக்குடும்பம்
3. திருப்புகழ்மாலை
4. நற்கருணைப் பவனி

(5 + 5 = 10 புள்ளிகள்)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** - கத்தோலிக்க திருமறை

Catholicism விடைப்பத்திரம் - தரம் - 7

பகுதி – I

1. 2
2. 3
3. 3
4. 1
5. 2
6. 4
7. 4
8. 3
9. 1
10. 1

(02)

1. பத்தாவது
2. ஒளியின் மறையுண்மைகளை
3. செபமாலையைத்
4. ஆலயத் திருவிழா
5. புகழ்ச்சி

(03)

1. ✓
2. ✓
3. X
4. X
5. ✓

பகுதி – II

(01)

1. ஏசா, யாக்கோபு
2. யாக்கோபு கடவுளோடும் மனிதரோடும் போராடி வெற்றிக் கொண்டதால்.
3. தலைமேல் நீர் ஊற்றிச் செபித்தல்.
4. கீழ்ப்படிதல், மனத்துறவு
5. ஒருமை, கட்டவிழாமை
6. அனனியா, சப்பிரா
7. அமலமரித் தியாகிகள் சபை, ஆசிர்வாதப்பர் சபை
8. பாலர் சபை, பீடப்பணியாளர் குழு, மரியாயின் சேனை
9. துயர் நிறை மறையுண்மைகள், மகிழ்ச்சி நிறை மறையுண்மைகள்
10. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

(02)

1. பிறருடைய சொத்துக்களை அபகரித்தல்.
   பிறருடைய உடைமைகளை அழித்தல், வீண்விரயம் செய்தல்.

2. பொருள்களின் தரத்தை குறைத்தல், இலஞ்சம் கொடுத்தல்.
   சம்பளம் கொடுக்காமை, வஞ்சகமான செயற்பாடு.

3. நேர்மையான வழியில் உழைத்தல், விலை கொடுத்து வாங்குதல், நன்கொடை மூலம் பெறுதல், பண்டமாற்று செய்தல், வாரிசுச் சொத்து.

(03)

1. மீட்பின் மறையுண்மைகள் (இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு, விண்ணேற்பு)
2. கபிரியேல் தூதர் தேவதாய்க்கு மங்கள வார்த்தை சொன்னது.
   மாதா எலிசபெத்தம்மாளை சந்தித்தது.
3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

අ.පො.ස [illegible] ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් [illegible] Past Papers Wiki [illegible]

(04)

1. ஆன்மீக வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
   புனிதர்களுக்கு நன்றி கூறுவதற்காகவும்.

2. - மக்களுக்கு ஆன்மீக ஊட்டத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கான செயல்களுக்கு முதலிடம் கொடுத்தல்.
   - நவநாட்களில் விசேட கருப்பொருளில் இறைவார்த்தையை தியானிப்பதற்கு துணை புரிதல்.
   - பங்கின் பெயர் கொண்ட புனிதரின் வாழ்வை தியானிப்பதற்கு ஈடுபடுத்தல்.

3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

(05)

1. நற்கருணைத் திருவிழா, ஞான ஒடுக்க தினங்கள்.

2. 4 வது நிலை - இயேசு தமது திருத்தாயாரை சந்திக்கிறார்.
   5 வது நிலை - சீரேன் ஊராகிய சீமோன், இயேசுவின் சிலுவையை சுமப்பதற்கு உதவுகிறார்.
   6 வது நிலை - வெரோணிக்கா என்ற பெண் இயேசுவின் திருமுகத்தை துடைக்கிறாள்.

3. பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்கவும்.

(06)

1. பெரிய வியாழக்கிழமை.
   நற்கருணை திருவிழா நடத்தும் நாள்.

2. இயேசுக் கிறிஸ்துவின் கெத்சமனி செபத்தில் பங்குபற்றுதல்.
   எமது விசேட தேவைகளுக்காக செபித்தல்.
   கிறிஸ்துவின் சீடனாக ஆன்மீகத்தில் வளர்ச்சியடைதல்.

(07) பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank